செய்தி வெளியீடு எண்.139　　　　　　　　　　நாள்.**22.2.2008**

## தமிழக வரலாற்றில் முதல்முறையாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்குத் தனிக் கொள்கை!

## முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்

**2006–2007ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரையின்போது "அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவல்ல சிறு தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், மாநிலத்தில் தொழில் வளத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அனைத்து சிறு தொழில்களுக்கும் முன்னர் அளிக்கப்பட்டு வந்த முதலீட்டு மானிய நிதியுதவித் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்களைக் கண்டறிவதற்காகத் தொழில் துறைச் செயலாளரின் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது.**

**அதனைத் தொடர்ந்து, 2006–2007ஆம் ஆண்டிற்கான சிறுதொழில் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் "2006ஆம் ஆண்டின் மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மேம்பாட்டுச் சட்டத்திற்கு இணங்க சிறுதொழில் துறையினருடன் கலந்தாலோசித்து, சிறுதொழில் வளர்ச்சிக்காகக் கொள்கை வகுக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.**

**தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்களைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு தனது அறிக்கையில், வட்டாரங்களின் தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமான பல்வேறு வகை அளவுகோல்களை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து தமிழகத்தில் 251 வட்டாரங்களைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்களாக அறிவிக்கலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்தது.**

**உயர்மட்டக் குழு வழங்கிய அப்பரிந்துரைகளின் அடிப்படையிலும், மாநிலத்திலுள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவன சங்கங்களின்**

பிரதிநிதிகளுடன் வெவ்வேறு கட்டங்களில் அரசு நடத்திய ஆலோசனைக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலும் தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ள **"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை"**யினை முதலமைச்சர் கலைஞர் இன்று (22.2.2008) தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார். இக்கொள்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

தொலை நோக்கு பார்வை

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் போட்டியிடும் திறமையை அதிகரிக்கச் செய்து அவற்றின் செயல் திறனை படிப்படியாக மேம்படுத்துதல்.
- மதிப்பு கூடுதலை அதிகப்படுத்தவும், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்திடவும், வேளாண்சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10 விழுக்காட்டிற்கும் அதிகமாக இலக்கு நிர்ணயம் செய்தல்.
- பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10 இலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

1. தொழில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்கள் :

- மாநிலத்தில் முதன்முறையாக குறு உற்பத்தி நிறுவனங்களுக்காக அடுக்குமாடி தொழிற்பேட்டைகள் உருவாக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தொழிற்பேட்டைகளில் தொழிற் கூடங்கள் அமைக்க விதிகள் தளர்த்தப்பட்டு தளப்பரப்பளவு குறியீடு (FSI) 1.5 முதல் 1.75 வரையிலும் அடுக்குமாடி தொழிற் பேட்டைகள் அமைக்க அதிகபட்சமாக 2.5 வரையிலும் அனுமதிக்கப்படும்.
- மாநிலத்தில் முதன்முறையாக தனியார் துறை மூலம் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கு 20 விழுக்காடு, அதிகபட்சமாக தொழிற்பேட்டை ஒன்றுக்கு ரூ. 1 கோடி வரை, அடிப்படை கட்டமைப்பு மானியமாக வழங்குதல்.
- சிப்காட் உருவாக்கும் தொழிற்பேட்டைகளில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 20 விழுக்காடு நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்படும். மற்றும் சிட்கோ மேம்படுத்தும் தொழிற்பேட்டைகளில்

குறுந்தொழில் நிறுவனங்களுக்கு 30 விழுக்காடு நிலப்பரப்பு, ஒதுக்கீடு செய்யப்படும்.

- தொழிற்பேட்டைகள் மற்றும் பின் தங்கிய வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 50 சதவீதம் சலுகை வழங்கப்படும்.

2. மானிய உதவித் திட்டங்கள்

அ. மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான மானிய உதவித் திட்டங்கள் :

- 15 சதவீதம் மூலதன மானியம் (இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பில்)
- முதல் 3 ஆண்டுகளுக்கு 20 சதவிகிதம் குறைந்த அழுத்த மின் மானியம்.
- முதல் 6 ஆண்டுகளில் செலுத்தப்படும் மதிப்பு கூட்டுவரிக்கு ஈடான மானியம் .

ஆ. பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கான மானிய உதவி திட்டங்கள்

- 15 சதவீதம் மூலதன மானியம் (இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பில்)
- குறைந்த பட்சம் 25 வேலையாட்களை பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு 5 சதவீதம் வேலை வாய்ப்பு பெருக்க மானியம்
- மாநிலத்தில் முதன்முறையாக பெண், பட்டியலிடப்பட்ட இனம்/பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர், மற்றும் அரவாணிகள் தொழில் முனைவோராக உள்ள நிறுவனங்களுக்கு 5 சதவீதம் கூடுதல் மூலதன மானியம்.
- தூய மற்றும் சுற்றுச் சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு அதற்காக நிறுவனப்பட்டுள்ள இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 சதவீதம் கூடுதல் மூலதன மானியம்.
- முதல் 3 ஆண்டுகளுக்கு 20 சதவீதம் குறைந்த அழுத்த மின் மானியம்

இ. வேளாண்சார் உற்பத்தி நிறுவனங்கள் அமைக்க மானிய உதவிகள்

மேற்குறிப்பிட்ட மானியச் சலுகைகள் மாநிலத்திலுள்ள அனைத்து 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண் சார் தொழில் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும். (ஏற்கனவே நடைமுறையிலிருந்த புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திலிருந்த வட்டாரம் ஒன்றுக்கு 5 நிறுவனங்கள் மற்றும் ரூ. 15.00 இலட்சம் மானிய உச்ச வரம்பு ஆகிய நிபந்தனைகள் நீக்கப்பட்டதோடு இம்மானிய உதவித் திட்டங்கள் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது).

ஈ. சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான மூலதன மானியம்

தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் மின் மற்றும் 1. மின் மற்றும் மின்னணு பொருட்கள் 2. தோல் மற்றும் தோல் பொருட்கள் 3. வாகன உதிரி பாகங்கள் 4. மருந்து மற்றும் மருந்து பொருட்கள் 5. சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள் 6. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள் 7. மாசுக்கட்டுப்பாடு உபகரணங்கள் 8. விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 9. சிக்கன கட்டுமான பொருட்கள் மற்றும் 10. ஆயத்த ஆடைகள் தயாரிப்பு ஆகிய சிறப்பு தொழில் இனங்களுக்கு 15 சதவீதம் சிறப்பு மூலதன மானியமாக வழங்கப்படும்.

3. தொழில் நுட்ப உதவித் திட்டங்கள்

அ) தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீன படுத்தலுக்காக வாங்கப்படும் கடன் தொகையில் 3 சதவீதம் அளவுக்கு பின் முனை வட்டி மானியமாக வழங்கப்படும்.

ஆ) காப்புரிமை சான்று மற்றும் வணிக குறியீடு சான்று பெற ஆகும் செலவில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

இ) பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு முயற்சி வாயிலாக தொழில் குழுமங்கள் மற்றும் சிறு கருவி மையங்கள் அமைக்க அரசு உதவும்.

ஈ) தூய்மையான மற்றும் சக்தித் திறனுள்ள தொழில் நுட்பங்களை ஏற்படுத்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த தொழில் நுட்பங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு தொழில் வளர்ச்சி நிதியம் அமைத்தல்.

உ) நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு ஆகியவற்றை புகுத்தும் நோக்குடன் தொழில் நுட்ப மற்றும் வணிக சேவை வசதி வளர்ப்பகங்கள் அமைக்கப்படும்.

4. செயல்திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்கங்களால் நடத்தப்படும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் குறு மற்றும் சிறு உற்பத்தி நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகிய திட்டங்களை செயல்படுத்த ஆகும் பயிற்சி கட்டண செலவில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.

5. உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தலுக்கான உதவி திட்டங்கள்

- தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் 1998–ன் வரையறைகளின்படி குறு மற்றும் சிறு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யும் உற்பத்திப் பொருட்களுக்கு 15 சதவீதம் விலை முன்னுரிமை அளிக்கப்படும்.
- மாநில அரசு அவ்வப்போது அறிவிக்கை வெளியிடும் உற்பத்திப் பொருட்களுக்கு கொள்முதல் முன்னுரிமை வழங்கப்படும்.
- பிணை வைப்புத் தொகை செலுத்துவதில் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு விதிவிலக்குச் சலுகை தொடரும்.
- தொழில் நிறுவன சங்கங்கள் தமிழ்நாட்டிலோ அல்லது வேறு மாநிலத்திலோ பொருட்காட்சிகள் நடத்துவதற்கு ஆகும் செலவில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும்.
- தொழில் முனைவோரின் குழுமங்கள் தங்களது உற்பத்திப் பொருளை பொதுவான பெயர் அல்லது வணிகச் சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளிக்கப்படும்.

6. கட்டுப்பாடுகள் நீக்கம் மற்றும் வழிமுறைகளை எளிதாக்கல்

1) தொழில் தொடங்க பொது விண்ணப்படிவம் மூலம் அரசு துறைகளுக்கு விண்ணப்பிக்கும் முறை அமுலாக்கப்படும்.

2) சட்டப் பூர்வமாக அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டிய விவரங்களை சமர்ப்பிக்கும் வழிமுறைகள் எளிதாக்கப்படும்.

3) தொழிற்சாலைகளை துவங்குவதற்கான வழிமுறைகளை விரைவுபடுத்தும் நோக்குடன் ஒற்றைச் சாளர தீர்வுச் சட்டம் அரசால் கொண்டுவரப்படும்.

7. நிருவாக சீரமைப்பு

- ➢ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை சேர்ந்தாய்வு மற்றும் பரிந்துரை செய்வதற்காக குறு சிறு மற்றும் நடுத்தரதொழில் நிறுவனங்களுக்கான வாரியம் அமைக்கப்படும்.
- ➢ கொள்கை செயல் படுத்துதலை கண்காணிக்கும் நோக்குடன் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு அதிகாரம் பெற்ற குழு ஏற்படுத்தப்படும்.
- ➢ தொழில் மற்றும் வணிகத்துறையின் நிருவாக அமைப்பு மறு சீரமைக்கப்படும்.

8. கொள்கை நடவடிக்கைகள்—நலிவுற்ற தொழில் நிறுவன புனரமைப்பு

- ➢ மாநிலத்தில் முதன் முறையாக நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை புனரமைப்பதற்கான சலுகை திட்டங்களுடன் கூடிய விரிவான கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது.
- ➢ மாநிலத்தில் தொழில் நிறுவனங்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க தனிக் கொள்கை அரசால் அறிவிக்கப்படும்.

இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மானியம் மற்றும் சலுகைத் திட்டங்கள் சிறுதொழில்களுக்கான கொள்கை வகுக்கப்படும் எனத் தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட நாளாகிய 1.8.2006 முதல் தொழில் தொடங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு இக்கொள்கை வெளியிடப்படுகின்ற நாளாகிய இன்று (22.02.2008) முதல் அல்லது இதற்குப்பின் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.